உ
சிவமயம்





பயிற்றோலை அச்சுவேலி தெற்கை
பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும்
கொண்ட

# அமரர்
# செல்லத்துரை சரஸ்வதி
## (தவமணி)

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்

## நினைவு மலர்

07.03.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னை மடியில்
14.04.1946

# அமரர்
# செல்லத்துரை சரஸ்வதி

இறைவனடியில்
05.02.2023

## திதி வெண்பா

ஆண்டு சுபகிருது தைத்திங்கள்
பூர்வபக்க பௌர்ணமி திதிதனில்
மாண்புடன் சரஸ்வதி பற்றறுத்து இவ்வுலககன்று
சீருடன் சேர்ந்தார் வைரவர் தாழ் தனையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பயிற்றோலை அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும்,
வாழ்விடமாகவும் கொண்ட

# அமரர்
# செல்லத்துரை சரஸ்வதி
## (தவமணி)

அவர்களின் சிவபதப்பேறு குறித்து

வெளியிடப்படும்

# “நினைவு மலர்”

## 07.03.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம் வாழ்வின் ஒளிவிளக்கே
எம் இதயத்தின் சுடர்விளக்கே
உற்றாரரின் உயிர் நாடியே
ஊராரின் உயிர் தோழியே
பாசத்தின் இரும்புப் பாலமாக
பண்பிலே உயர் பாலமாக
தாயில் சிறந்தவளாக
தரணியில் உயர்ந்தவளாக
உறவின் உயிராக
தம்வாழ்வில் சிறந்து எமக்கு
நல்வழி காட்டிச் சென்ற
எம் குடும்பத்தலைவியே
உம் பாதங்களில்
இம்மலரை காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.



குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

ஆலந்தானுகந் தமுது செய்தானை
ஆதியையமரர்தொழு தேத்தும்
சீலந்தான் பெரிதும்முடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தையுளானை
ஏலவார் குழலாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பனெம் மானைக்
காணக்கண்ணடியேன் பெற்றவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த் (து)
உன் விரை யார்கழற் (கு) என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந் (து) உன்னைப் போற்றி
சய சய போற்றி யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ள

# திருவிசைப்பா

ஏக நாயகனை இமயவர்க்கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல் வணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழிமிழலை
விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனையன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன்யானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே

## திருப்புராணம்

அருவமும் உருவுமாகி அனாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதி
பிழந்ததோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்குதித்தனன்
உலக உய்ய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் லெனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனேக குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## பட்டினத்தார் பாடல்

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூழ்கமூழ்கவே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைச் சுவடுகள்

எழில்கொஞ்சும் இலங்கைத்திரு நாட்டின் வடபால் பனைவளமும், தோட்டங்களுடன் நீர்மை குன்றா நிலவளமும் நிறைந்த யாழ்ப்பாணம் எனும் மாவட்டத்தில் யாழ் நகரிற்கும், பருத்தித்துறைக்கும் மத்தியில் அமைந்துள்ள அச்சுவேலி எனும் கிராமத்திலே பயிற்றோலை ஞானவைரவர் குல தெய்வமாகக் கொண்ட காலஞ்சென்ற (செல்லர், பொன்னு) ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும் இரண்டு அண்ணன்களிற்கு (கந்தசாமி (கனடா), கிருஷ்ணபிள்ளை (பத்தமேனி) செல்லத் தேவதையாக கல்வித் தெய்வம் சஸ்ரவதித்தாயின் பெயரைக் கொண்டு 14.04.1946ம் ஆண்டு (அன்னார்) சரஸ்வதி பிறந்தார்.

இவர் தனது சிறுவயதில் துடிதுடிப்புடன் செயற்பட்டார். தனது கல்வியை தனது பெயரைக் கொண்ட அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் கற்றார். க.பொ.த சாதாரண பரீட்சை வரை அக்காலத்தில் முடித்தார். இவர் திருமண வயதை அடைந்ததும் பெற்றோர்களால் குலதெய்வத்தின் அருளாலும் அதே கிராமத்தைச் சேர்ந்த சிறந்த பயிர்களை விளைவிக்கும் செம்மண் வாசம் வீசும் பத்தமேனியில் காலஞ்சென்ற (கந்தையா, இலட்சுமி) ஆகியோரின் பாசமிகு மகன் யாரைக கேட்டாலும் தெரியும் என சொல்லும் ஒருவர். தோட்டத்தினை சிவனோபாயமாகவும் மாட்டுவண்டி சவாரியிலும் பெயர்பெற்ற (கந்தையா, இலட்சுமியின்) நான்காவது மகன் செல்லத்துரை (வீரசிங்கம்) அவரை திருமணம் செய்து கொடுத்தனர்.

இல்லற வாழ்க்கையில் சந்தோசமாகவும், பாசமாகவும் இருந்த இவர்களிற்கு வாழ்க்கை பயணத்தில் மூத்த மகளாகவும், தேவதையாகவும் தர்ஷினி எனும் நாமத்தை சூட்டி "உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் என்று கேலி செய்த கூட்டம் ஒருநாள் வணங்கிடும்" என எண்ணி மூத்த வாரிசை மகளாக 1972ம் ஆண்டு பெற்றெடுத்தனர். அடுத்து தசீந்திரன் (அப்பன்) எனும் மூத்த புதல்வனையும், அடுத்து ராஜசுதன் (சுதன்), மூன்றாவது மகனாக சிவராஜ் (குழந்தை), அடுத்து தர்மினி (பிரான்ஸ்), கடைசி வாரிசாக சாமினி (இலண்டன்) அவர்களையும் பெற்றெடுத்தனர்.

பிள்ளைகள் ஆறுடனும் தங்கள் வாழ்க்கையை இனிமையாக வாழ்ந்தார்கள். எந்தகுறையுமின்றி வாழ்ந்தார்கள். இவர்களின் செல்வந்தர்களான மூத்த புத்திரிக்கு திருமண வயது வந்ததும் 2006ம் ஆண்டு சவரித்திடலில் கால்பதிக்கும், தோட்டப் பயிர்களையும் செய்யும் (நாகலிங்கம், நேசரத்தினம்) ஏழாவது மகனாக பிறந்த சேகரலிங்கம் (இரும்பன்) என்பவரை மணம் முடித்துக் கொடுத்தார்.

பின் தசீந்திரன் என்பவரிற்கு மூளாயைச் சேர்ந்த (கணேசமூர்த்தி, சரஸ்வதி) பரமேஸ்வரி என்பவரையும் ராஜசுதனிற்கு சரசாலையைச் சேர்ந்த (சற்குணசிங்கம் பரமேஸ்வரி) என்பவரின் கனிஷ்ட புத்திரி கௌசினி என்பவரையும் சிவராஜ் என்பவரிற்கு வசாவிளானைச் சேர்ந்த அருந்தவராசா, ஞானரஞ்சினி அவர்களின் நான்காவது மகள் ஜெயந்தினியையும் தர்மினிக்கு உஷனைச் சேர்ந்த கந்தசாமி சின்னம்மா ஆகியோரின் மூன்றாவது மகன் பிரான்சில் வசிக்கும் மனோறஞ்சித்தையும் கடைசி வாரிசிற்கு வறணியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம் ஆகியோரின் இரண்டாவது மகன் இலண்டனில் வசிக்கும் தயானந்தன் என்பவரையும் மணம் முடித்துக்கொடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கடமைகளில் ஒன்று நிறைவேறியது. ஆறு செல்வங்களின் வாழ்க்கையில் 2007ம் ஆண்டு மூத்தமகள் சேகரலிங்கம் தர்ஷினி எனும் தம்பதிக்கு மூத்த வாரிசாகவும், தேவதையாகவும் மூத்த பேர்த்தி கஜானா பிறந்தாா. 2010ம் ஆண்டு ஹரிஸ் எனும் பேரனும் தசிந்திரன், பரமேஸ்வரிக்கு 2008, 2009 அபிக்கிருஷ்ணா, கேசிகா என்பவர்களையும் ராஜசுதன் கௌசினிற்கு ராஜவர்மன், ராஜவருண், சிவராஜ் ஜெந்தினிற்கு கவினா, அபிசனா, மனோறஞ்சித் தர்மினிக்கு அபிசாளனி, துவிஷாந், தஷ்வின் எனும் மழலைகளையும் தயானந்தன் சாமினி சர்வின், சஞ்சனா எனும் இரு பிள்ளை களையும் பெற்றனர் பேரப்பிள்ளைகளை தன் பிள்ளைகளை வளர்த்ததைப் போல் வளர்த்தார். தூரதேசத்தில் இருந்தாலும் அவர்களுக்கு தேவையானவற்றை அனுப்பினார்.

தன் உயிர் கணவனை 2014ம் ஆண்டு பறிகொடுத்தார். பெரும் இழப்புடன் தன் மூத்த மகளுடன் தனது தாய்மனையில் வாழ்ந்தார். மூத்த பேர்த்தியின் பூப்புனித நீராட்டு விழாவை 2018ம் ஆண்டு தன் குடும்பத்துடன் கொண்டாடினார். எல்லாப் பேரக்குழந்தையின் பிறந்ததினத்தையும் கொண்டாடினார். இரண்டு தடவை இந்தியாவுக்கும் சென்றார். தனது மனத் திருப்திக்கு எல்லாவற்றையும் கண்டுகளித்தார். ஓடி ஓடி எல்லா இடமும் சென்று 2022ம் ஆண்டு பெப்ரவரி 8ம் திகதி சிறு நோயால் முடங்கினார். வீட்டிலேயே இருந்தார். இறைபக்தியின் காரணத்தினாலோ என்னவோ தன் குடும்பத்தினர் நின்ற வேளையில் 05.02.2023 எல்லோரையும் தவிக்க விட்டு தைப்பூச தினத்தன்று ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த மகளின் புலம்பல்

என்னை கருவில் சுமக்கமுன்னே
உன் கனவில் சுமந்தாயே
நான் பிறந்த அந்த நாளை
வலி மறந்து சிரித்தாயே
அம்மா என அழைக்க என் ஓசை
கண்டு விழியாலே
எனக்கு எதுசரி, எது தவறு என்று எடுத்துக்காட்டினாயே
என்றுமே என்னை வெறுக்காதவரும் நீயே
நான் உன்னிடம் மழலையாய் இருந்த காலம்போய்
நீ என்னிடம் மழலையாய் இருந்தாயே
எனக்காக உன் கண்கள் கலங்கினால் இன்றும் நான் குழந்தையே
அளவுகளே இல்லாத பாசம்காட்டி
மற்றவர்கள் காட்டிடாத நேசம்காட்டி
என்னுடன் இருந்ததாயே
உன் கடைசி நேரம் எனக்காக வந்தவளே
எவ்வளவு கோபம் காட்டினாலும் உடனே பிள்ளை என்றாயே
எல்லாம் சொல்லிதர, வழிகாட்டியாக தாயே நீயிருந்தாய்
எனிநான் யாரை காண்பது உன்னிடத்தில்
ஏற்கவே முடியவில்லை திரும்பி வா நான்காண
முடியாத தேசம் என்னைவிட்டு போனதேனோ?
நீ வேண்டும் மீண்டும் தாயே எனக்கு ஒரு வரம்தா!
உன் கருவறை அணைப்பில் வாழ.

உன் பிரிவை ஏற்க முடியாத மூத்த மகள்

சே.தர்ஷினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த மகனின் புலம்பல்

கர்ப்பத்தில் நெளிந்த என்னை
நுட்பமாய் தொட்டு ரசித்தவளே
மேதையாய் என்னை வளர்த்தாய்
உன்மடியில் சொர்க்கத்தை காட்டினவளே
எத்தனையோ கோயில் உண்டு
எத்தனையோ சாமியுண்டு
கையெடுத்து கூப்பிட்டு
நான் உன்கிட்டையே வேண்டிக்கிறேன்
மெல்ல உயிர்த்து வா அம்மா
என் அம்மா எழுந்து வா அம்மா
என் உயிரே என்னை விட்டு போனியோ
நீ இருக்காய் என்று இருந்தனே இனி
தாளம் மாறாத பாட்டுச் சபையில் உன்னை நான் தேடவா
என்னை கொஞ்சவே உலகினில் யாரும் இல்லையே.
நீ என்னைவிட்டு போனதில் இருந்து
என்தாயே என்னை தேடி வருவாயா ஒருமுறை
உன் ஆத்மா சாந்தியடையட்டும் என்றும்
ஏழு ஜென்மமும் நீ என் தாயாக வேண்டும்.



மூத்தமகன்
செ.தசீந்திரன்
(அப்பன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா என ஒருமுறை அழைக்க ஏங்கும் மகன்

"நூறு சாமிகள் இருந்தாலும்
அம்மா உன்னைபோல் ஆகிடுமா
கோடி கோடியாய் கொடுத்தாலும்
நீ தந்த அன்பு கிடைத்திடுமா"
"நான் பட்ட கடன் தீர்பேன் என்றால்
ஓர் ஜென்மம் போதாதம்மா"
நடமாடு கோயில் நீதானே"
மழை வெயில் பார்க்காமல் எந்த சோர்வும்
இல்லாமல் வளர்த்தவளே
மெழுகாக உருகி என்னை வளர்த்தவளே
என் சிரிப்பில் உன் வலியை மறைத்தாயே
வேர் இல்லாத மரம் போல் என்னை பூமியில் நட்டவளே
ஊர்கண் என்மேலே பட்டவுடன்
உயிர் நோக துடித்தவரே
உலகத்தின் பந்தங்கள் எல்லாம் சொல்லித்தந்தவளே
பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில்
வழிநடத்திச் சென்றவளே
இன்று என்னை அழவைத்துவிட்டு
நான் பார்க்கமுடியாத இறைவனிடம் சென்றதேனோ?



உன்னை அம்மா என அழைக்க ஏங்கும்

செ.ராஜசுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் குழந்தையின் குமுறல்

அம்மா! அம்மா!
எந்த ஆருயிரே
இந்த உலகில் நான்
ஒருவருக்கு அடிமை என்றால்
அது என் அம்மா உனக்கே

நீயே நீயே நானே நீயே
நெஞ்சில் வாழ்ந்த உயிர் நீயே நீயே
எந்த நிமிடம் நீ எண்ணினாயோ நான்
உன்னை வளர்த்து தாங்குவாய் என்றும்
என்றுமே என் மூத்த மகள் நீயே அம்மா

குழந்தை குழந்தை என்று
நான் வளர்ந்த பிறகும் அழைத்தாயே
ஏன் வரலேற்று என்று கேட்டு அதட்டுவாயே
உன்னைவிட எனக்கு யாரு அம்மா
தேடி பார்த்தேனே காணோம் உன்னை
கண்ணாம் பூச்சியே வா நீ வெளியே
தாயே உயிர் பிரிந்தாயே
என்னை தனியே தவிக்க விட்டாயே
நான் தூங்க முன்னே நீ தூங்கி போனியே
உன்போன்ற தெய்வம் இல்லை
உன் அன்பு கடனை திருப்பி தரமுடியவில்லை
நான் புலம்பி அழுதபோது ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா இருக்கிறாய்
எங்கு சென்றபோதும்
என்னை துணையாக அழைத்தாயே
சொரக்கவாசல் சேரும்போது
தனியாக சென்றாயே
தாயே உன்ஞாபக அலைகள்
வீசி தனிமைதியானேன்
என் கண்ணில் வழிந்த நீர் நிலை
அணைந்திருந்தால் என்னவோ
உன்னை மீட்டிருப்பேனோ
நீவேண்டும் என் அம்மாவாக

என்றும் உன் குழந்தையாக
செ.சிவராஜ்

**நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை..**
**நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும்**
**உன் உழைப்பால்..**
**நீ எண்ணியது உன்னை வந்து சேரும்..**
**நீ நீயாக இரு**



**ஏ பி ஜே அப்துல் கலாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமான மகளின் புலம்பல்

உயிருக்குள் அடைகாத்து
உதிரத்தை பாலாக்கி
பாசத்தில் தாலாட்டி பல இரவுகள்
தூக்கத்தை தொலைத்து எங்களுக்காக வாழ்ந்தவளே
அன்று என் அருகில் சத்தம் கேட்டு சிரித்தாயே
இன்று அழுகிறேன் சிரிப்பதற்கு நீ இல்லை என்று
தூரதேசத்தில் இருந்து என்ன பிரயோசனம்
உன்கடைசி நேரத்தில் உன்கூட நான் இல்லையே
நீ இல்லை என்றால் நானும் இல்லை
ஆனால் நீ இல்லா உலகில் மட்டும்
என்னை தவிக்க விட்டு சென்றாயே
ஆயிரம் உறவுகள் அவனியிலே கிடந்தாலும்
உன்போல் ஆகுமா உன்னிடம்
இருந்தவரை என் உலகம் அழகத்தான் இருந்தது.
வருவாய் அழியா கருவிலும் எனைக் காதல் செய்தவளே
உன் பிரிவால் கதறுகிறேன் திரும்பி வருவாயா ஒருமுறை
உன்னை என்றுமே மனதில் சுமந்தபடி உன் பாசமான மகள்



பாசமான மகள்
ம.தர்மினி
(பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்ல மகளின் புலம்பல்

எனை வளர்த்த அம்மா நீ
நீ நட்ட மரத்தை வந்து பார்க்க மாட்டாயா
தீயாய் எரியுதம்மா வெந்து வெந்து கருகுதம்மா
உன் துயரம் தீர்க்க
அவசரம் அவசரமாக தூரதேசம்தானிருந்து
துடித்தழுது வந்தவளை கலங்கவிட்டு போனதென்ன
சாமினி வா வா என் அழைத்த நீ
நான் வந்த அன்று மட்டும் கதைத்து ஏன் பேசினியோ?
நீ வந்து பார்த்தா போய்டுவன் போய்டுவன் என்று நீ கூறியது
எதற்காக என்னை கலங்க வைத்து போனதேனோ?
உன் அருகில் இருந்து அரவணைக்க முடியவில்லை
தொலைவில் இருந்து எனக்கு அம்மா இருக்கிறா
என்னும் தன்னம்பிக்கையுடன் இருந்தேன் இனி
நான் என்ன செய்வது அம்மா?
என்னை பெத்த அம்மாவே என் ஆசை அம்மாவே
செல்ல மகள் வந்திருக்கிறேன் கண்திறந்து பாரம்மா
நெஞ்சு படபடக்க ரத்தம் துடி துடிக்க
செல்லமகள் வந்திருக்கேன் கண்திறந்து பாரம்மா
என் அம்மா நீதான் எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
என் உலகமான அம்மா நீ வேண்டும்

என்றும் உன் நினைவோடு
செல்லமகள் சாமினி
(லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணன்மார் புலம்பல்

உடன்பிறந்தோர் நாம் இருக்க நீயேன் போனாயோ
தங்கையென நான் அழைக்கையில்
பாசத்துடன் பதில் தருவாய்
எங்களின் தேவதையே
தேவலோகம் ஏன் போனாயோ
உடன் பிறந்தாலும் எங்கள் மகளாக இருந்தாயே
எங்களின் பாசமலரே
அண்ணா என ஒருமுறை அழைக்கமாட்டியோ
எம்மை கண்ணீரில் உரைத்துவிட்டு
எங்கே போனாயோ எம்செல்லத் தங்கையே
தங்கத்தை விட உயர்ந்தவளே
உன் பாசத்தில் அடிமையானோம்
மலர்களோடு மலராக பூத்த ரோஜாவே
உன்னை காண ஏங்குகிறோம் தங்கச்சி
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டிக்கொள்கிறேன்.
உன்னை காண ஏங்கும்

உன் பாசக்கார அண்ணாக்கள்
கந்தசாமி (கனடா),
கிருஷ்ணபிள்ளை
(சின்னத்தம்பி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன்பிறவா சகோதரர்கள்

அன்னை மடி வேறானாலும்
அன்பு வழிமாறாமலும் உடன்பிறந்த உறவுகள்
போல் வரிசையுடன் இருந்தவளே
உயிராக பழகியவளே ரத்தபந்தம்
எம் தாயின் வயிற்றில் பிறக்காதவளே
சொந்தத்தால் ஒற்றுமையானவளே
இறுதிவரை எங்களோடு இருந்தவளே
ஏன் எங்களை தவிக்கவிட்டு சென்றாய்
எம் அன்புத் தெய்வமே திரும்பி வா

இழப்பால் வாடும்
உடன்பிறவாச் சகோதரர்கள்

**உலகம் உன்னை**
**அறிவதை விட**
**உன்னை உலகிற்கு**
**அறிமுகம் செய்துகொள்!**



**ஏ பி ஜே அப்துல் கலாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்களின் புலம்பல்

எங்களுக்கு இன்னொரு தாயாய் இருந்தீரே
குடும்பத்தின் குலவிளக்காய் ஒளி வீசியாவரே
எங்கள் அன்பு மாமியே
பலகாலம் சேர்ந்திருப்போம் என்றெண்ணி நாமிருக்க
வேசம் கலைந்தது போல் சடுதியாய் சென்றீரோ

பிரியமுடன் எம்மீது பாசத்தை வைத்தவரே
உரிமையுடன் எம்மைக் காத்த உத்தமியே
அமைதி, சாந்தம், பாசம், அன்பு வாழ்க்கை
என அத்தனையும் கண்டோம் மாமி
இனி யாரை மாமி என அழைப்பது
உங்களோடு வாழ்ந்த காலம் என்றுமே மறக்காது

அன்னையாய் என்றும்
மருமக்கள்
சேகரலிங்கம்(இரும்பன்),
பரமேஸ்வரி (பேபி),
கௌசினி,
ஜெயந்தினி,
மனோறஞ்சித் (பிரான்ஸ்),
தயானந்தன்(லண்டன்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த பேர்த்தியின் புலம்பல்

என்னை பெற்றவளை பெற்ற உத்தமியே
என்சாமி நீதான் அம்மம்மா
கையெடுத்து கூப்பிட்டுநான் உன்கிட்டை
வேண்டிக்கிறேன் மெல்ல உயிர்பிழைச்சு வா அம்மம்மா
எழுந்திருச்சு வா அம்மம்மா மனசு பதறுதம்மா
செல்ல அம்மம்மா வா அம்மம்மா!

என் அம்மாவை பெத்தவளே
என் ஆசை அம்மம்மாவே
செல்ல பேர்த்தி கூப்பிடுறன் கண்முழிச்சு பாரம்மா
செல்லம்மா நீயென்னை பிள்ளை என்று கூப்பிட்டியே
பிள்ளை கிட்டயே பேசமா கிடக்கிறியே
ஊரில் உள்ள தெரு நாயும் சோறு நீ போடுவாய என்று
நம்ம வீட்டு வாசலிலே வாலாட்டி நிற்குதம்மம்மா
நெஞ்சுபடபடக்க இரத்தம் கொதி கொதிக்க
என்னைவிட்டு போனியோ அம்மம்மா!

உன் செல்லப்பேர்த்தி
சே.கஜானா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன் புலம்பல்

புன்முருவல் அள்ளித் தெளித்தாயே
தெய்வமே நேரில் வந்து தரிசனம் தந்தாயே
என் தாய்க்கு நிகரானவரே
நாட்கள், வாரம், மாதம் என்றுமே
பாசத்தின் சிகரத்து எடுத்து சென்று சிரித்த முகத்தோடு
சிந்தை மகிழ்வோடும் சீராட்டி தாலாட்டி
நான்கேட்கும் எல்லா வற்றையும் வாங்கித்தந்து
இரவு பகலாக என்னுடன் பலகதை பேசி இருந்த
நீ இன்று என் நெஞ்சம் கலங்க என்னைவிட்டு
ஏன் போனாயோ?அருகில் இல்லை
அரவணைக்க என்னுகிறேன் என்றுமே
என்தாயின் தாயாக நீ
நிம்மதியாய் உறங்கு அம்மம்மா.

பேரன்
சே.ஹரிஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன், பேத்தி புலம்பல்

அன்பின் உறைவிடமே
அணையாத அகல் விளக்கே
தூரதேசம், இடம் இருந்தாலும்
எம்முடன் தினமும் கதைத்து
மனமகிழ்வோடு பல தின்பண்டங்களையும்,
பொருட்களையும் வாங்கித்தந்தீரே
இனியார் வாங்கி அனுப்புவார்களே அம்மம்மாவே
எங்களைவிட்டு போனீரோ
ஒருநிமிடம் நினைத்தீர்களா? கலங்குவோம் என்று
உங்களுக்கு கடமை செய்யத்தவறிவிட்டோம்
அம்மம்மாவே என்றும் உங்கள்
நினைவோடு அப்பம்மா அம்மம்மா

பேரன், பேர்த்திகள்
அபிக்கிருஷ்ணா, கேசிகா,
ராஜவர்மன், ராஜவருண்
கவினா, அபிசனா
அபிசாளினி, துவிசாந், தஷ்வின் (பிரான்ஸ்)
சர்வின், சஞ்சனா (இலண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மச்சான், மச்சாள்மார் குமுறல்**

ஆசை மச்சாளே எங்களை ஏங்கவிட்டு போனதேன்
நாளும் பொழுதும் உனைக்கான ஏங்குகிறோம்
உன்மையான அன்பைப் பிரிந்து விட்டோம்
அன்புக்கு மேலான உமைப் பிரிந்து விட்டோம்
அன்பு மச்சாளே
நிலையற்ற இவ்வுலக வாழ்வுதனில்
நிறம் மாறும் மனிதர்க்கிடையில்
எங்களுக்காக வாழ்ந்திட்டவளே
பாசத்தின் அரவணைப்பில் எமையெல்லாம் திளைத்திருக்க
செய்து விட்டு திடீரென சென்றதேனோ?
உங்களை இனியெங்கு காண்போம் இனி
எமை விட்டு நீங்கள் நெடுந்தூரம் சென்றதேனோ?
உந்தன் பிரிவால் வாடும்

மச்சான், மச்சாள்
நல்லம்மா (கனடா),
சத்தியபாலதேவி, நடேசு

**வாழ்கை என்பது**



ஒரு சந்தர்ப்பம் – நழுவி விடாதிருங்கள்
ஒரு கடமை – நிறைவேற்றுங்கள்
ஒரு இலட்சியம் – சாதியுங்கள்
ஒரு சோகம் – தாங்கிக் கொள்ளுங்கள்
ஒரு போராட்டம் – வென்று காட்டுங்கள்
ஒரு பயணம் – நடத்தி முடியுங்கள்

ஏ பி ஜே அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

எங்கள் அப்பாவுடன் உடன்பிறந்தவரே
எங்களை உங்கள் பிள்ளைகள்
போல் நேசித்தவரே
உயிரும் உணர்வும் கலந்தவரே
எங்களை யாருக்காகவும்
விட்டுக் கொடுக்காதவரே
தவறி விழுந்தாலும் தாங்கிப்பிடித்த உறவே
பெரிய இழப்பு திரும்பி
வரமாட்டீர்கள் என்று நொந்தும்
ஏங்குகிறோம் திரும்பி வாருங்கள்
என்றுமே எங்கள் குல தெய்வமாக
நீங்கள் மேலிடத்தில்
இருந்து ஆசீர்வதியுங்கள்
மறைந்தாலும் எம் உணர்வாக நீங்கள்

திரும்பி வாருங்கள்

தனுசா, மதி,
கசா, கமல்,
சதீஸ், துஷியந்தினி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஔவையார் அருளிச் செய்த
# விநாயகர் அகவல்

அற்புத விநாயகர்தம் ஆசிரியப் பாவுரையைச்
சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே – முற்படுசீர்ச்
செஞ்சொற்பொருளெல் லாங்கடந்து, தூய்தாம் மெய்ஞ்ஞானமிகு
கற்பக விநாயகன்றாள் காப்பு.

**சீதக் களபச் செந்தா மரைப்பூம்**
**பாதச் சிலம்பு பலஇசை பாடப்**
**பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்**
**வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்**
**பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்**
**வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்**
**அஞ்சு கரமும் அங்குச பாசமும்**
**நெஞ்சில் குடி கொண்டநீல மேனியும்**
**நான்ற வாயும் நாலிரு புயமும்**
**மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்**
**இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்**
**திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்**
**சொற்புதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான**
**அற்புத னீன்ற கற்பகக் களிறே**
**முப்பழ நுகரும் மூசிக வாகன**
**இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயா எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதா ரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் கழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லாம னோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்ச்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தத்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில முக்கிய ஆசார முறைகள்

1 கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது.

2 தனது இடது கையினால் ஆசனம் போட்டால் ஆயுள் குறைவு. தனது இடது கையினால் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் புத்திரர் அழிவு. இடது கையினால் சாப்பாடு போட்டுக்கொண்டால் செல்வம் அழியும். தனது இடது கையால் படுக்கை போட்டால் இருப்பிடம் சேதம் ஆகும்.

3 ஜோதிடர், குரு, நோயாளி, கர்ப்பிணி, மருத்துவர், சந்நியாசி, முதலியவர்களுக்கு அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் கண்டிப்பாக உதவ வேண்டும்.

4 பசு, தேர், நெய்க்குடம், அரசு, வில்வம். அரசுடன் சேர்ந்த வேம்பு இவைகள் எதிரில் குறுக்கிட்டால், வலது புறம் சுற்றிச் செல்ல வேண்டும்.

5 குடும்பஸ்தன் ஒரு துணியுடன் உணவு உட்கொள்ளக் கூடாது. ஒரு கையை தரையில் ஊன்றிக் கொண்டு சாப்பிடக் கூடாது. துணியில்லாமல் குளிக்கக்கூடாது. சூரியனுக்கு எதிரில் மலசலம் கழிக்கக் கூடாது.

6 கன்றுக்குட்டியின் கயிற்றைத் தாண்டக்கூடாது. மழை பெய்யும் போது ஓடக்கூடாது. தண்ணீரில் தன் உருவத்தைப் பார்க்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 வானவில்லைப் பிறருக்குக் காட்டக்கூடாது.

8 ஈரக் காலுடன் படுக்கக்கூடாது.

9 வடக்கிலும், தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு எனும் திசைகளிலும் தலை வைத்துப் படுக்கக்கூடாது.

10 பிணப்புகை, களவெயில், தீபநிழல் இவை நம்மீது படக் கூடாது.

11 நெல்லிக்காய், ஊறுகாய், இஞ்சி, தயிர் இவற்றை இரவில் சாப்பிடக்கூடாது.

## தலையில் பூச்சூடுதல்

பெண்கள் தினசரி ஏதாவதொரு பூவைத் தலையில் சூடிக்கொள்ள வேண்டும்.

ரோஜா மலர் – பார்வைக்கு அழகைக் கொடுக்கும். நறுமணத்தைக் கொடுக்கும். இதயம் பலம் கொடுக்கும்.

மல்லிகைப்பூ – கண் பார்வையைக் குணமாக்கும்.

செவ்வந்திப்பூ – கூந்தல் வளரும், கண்ணுக்குக் குளிர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச குறியீடுகள்

வெண்புறா, ஒலிவ் மரத்தின் இலை – சமாதானம்

சிவப்புச் சக்கரம் – வளர்ச்சி

சிவப்பு முக்கோணம் – குடும்பக் கட்டுப்பாடு

சிவப்பு விளக்கு – மருத்துவமனை, ஆபத்து, நிறுத்து

சிவப்பு கொடி – உலகத் தொழிலாளர் அமைப்பு, புரட்சி

கறுப்பு கொடி – எதிர்ப்பு, சோகம், மரணம்

மஞ்சள் கொடி – தொற்றுநோய்

செஞ்சிலுவை – மருத்துவ உதவி

செம்பிறை – அரபு நாடுகளின் செம்பிறைச் சங்கம்

கையில், சட்டையில் கறுப்புத்துணி – துக்கம்

அரைக்கம்பத்தில் தேசியக் கொடி – இரங்கல்

தலைகீழான கொடி – துன்பம்

வெள்ளைக்கொடி – சமாதானம், பௌத்தர்களின் துக்கம்

பச்சை விளக்கு – பண்பாடு, நாகரிகம்

தீப்பந்தம் – ஒலிம்பிக்


கண்கள் கட்டப்பட்டு கையில் தராசு வைத்திருக்கும் பெண் –நீதிபதி

சுட்டுவிரலும் நடுவிரலும் சேர்த்து V அடையாள வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அணைந்தும் அணையா ஒளிப்பிளம்பாய் அன்பு , பண்பு,
பாசம் நிறைந்து எம்முடன் வாழ்ந்த எங்கள் குடும்பத்
தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து
உதவிய அன்புள்ளங்களுக்கும் , மற்றும்
இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்.
உள்ளூர் மற்றும் , வெளிமாவட்டங்களிலிருந்து
இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய
நல்லுள்ளங்களிற்கும். வெளிநாடுகளிலிருந்து
அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், கண்ணீர்
அஞ்சலிப்பதாதைகள் வைத்து அஞ்சலி
செலுத்தியோருக்கும் , மலர்வளையம்
சார்த்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம்
வெளியிட்டோருக்கும், சமூக வலைத்தளங்களுடாக
அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், அந்தியேட்டி,
வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்ட
அன்புள்ளங்களுக்கும் இம்மலரினை அழகாக அச்சிட்டு
தந்த அச்சுவேலி தர்சா தமிழ்ப் பதிப்பகத்தாருக்கும்
மற்றும் பல வழிகளில் எமக்கு உற்ற துணையாக நின்று
உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த
நன்றியை நவில்கின்றோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்.

பயிற்றோலை
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

dation.
org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

THARSA TAMIL PRINTERS
அச்சுவேலி
021 205 8266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org